**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் – 2008–09ம் ஆண்டு முதல் சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.1 கோடியே 50 இலட்சமாக நிதியை உயர்த்துதல் மற்றும் 2008–09ம் ஆண்டிற்கு இத்திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அ.தி.1) துறை

அரசாணை (நிலை) எண்.107 நாள். 23.6.2008

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.84, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 25.7.06.
2. அரசாணை (நிலை) எண்.64, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 17.5.07.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் நேர்முக கடித எண்.31102/ 07/என்இடிஎம்.3, நாள் 24.5.2008.

**ஆணை:**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 1997–98 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு தொகுதி ஒன்றிற்கு தலா ரூ.25 இலட்சம் வீதம் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியாக வழங்கப்பட்டது. பின்னர், இத்தொகை படிப்படியாக அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்தது. 2006–07ம் ஆண்டு முதல் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ரூ.1 கோடியே 20 இலட்சம் வீதம் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டது.

2. படிக்கப்பட்டவை இரண்டில் உள்ள அரசாணையில் 2007–08ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் குறித்த ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 14.5.08அன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 2008–09ம் ஆண்டு முதல் ரூ.1.20 கோடியிலிருந்து ரூ.1.50 கோடியாக உயர்த்தி அறிவித்துள்ளார்.

4. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட நேர்முக கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ஒரு கருத்துருவினை அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளார். அதன்படி ஒரு தொகுதிக்கு தற்போதைய ஒதுக்கீடான ரூ.1.50 கோடியில் கட்டாயப் பணிகளை செய்ய 50 விழுக்காடு நிதியான ரூ.75.00 இலட்சத்தை வரையறுக்கப்பட்ட நிதியாகவும், மீதமுள்ள ரூ.75.00 இலட்சத்தை வரையறுக்கப்படாத நிதியாகவும் ஒதுக்கீடு செய்யலாம் என்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் 2008–09ம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகளையும் அரசுக்கு சமர்ப்பித்து ஆணை வெளியிட பரிந்துரை செய்துள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசீலித்து ஏற்றுக் கொண்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒதுக்கப்படும் தொகை , 2008–09 ஆம் ஆண்டு முதல் ரூ.1.20 கோடியிலிருந்து ரூ.1.50 கோடியாக உயர்த்தப்படுகிறது.

(ii) உயர்த்தப்பட்ட ரூ.1.50 கோடி தொகையில் 50 விழுக்காடு நிதியான ரூ.75.00 இலட்சத்தை வரையறுக்கப்பட்ட நிதியாகவும், மீதமுள்ள ரூ.75.00 இலட்சத்தை வரையறுக்கப்படாத நிதியாகவும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(iii) 2008–09ம் ஆண்டிற்கு சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் இந்த ஆணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

6. ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்படும் தொகை ரூ.1.20 கோடியிலிருந்து ரூ.1.50 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளதால், இத்திட்டத்திற்கு 2008–09ஆம் ஆண்டிற்கு ரூ.70.50 கோடி தொகை கூடுதலாகத் தேவைப்படுகிறது. இதற்கான நிதி ஒதுக்கீடு 2008–09ம் ஆண்டிற்கான முதல் துணை மானியக் கோரிக்கையில் மேற்கொள்ளப்படும். மேற்கண்ட நிதி ஒதுக்கீடு செய்ய ஏதுவாக தேவையான விளக்கக் குறிப்பு மற்றும் வரவு செலவுத் திட்டக் கருத்துருக்களை நிதி (ஊரக வளர்ச்சி/ வரவு செலவு பொது–I) துறைக்கு உரிய தருணத்தில் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.152/DS (B)/2008 ,நாள். 23.6.08 பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு செயலாளர் (பொ)

**அரசாணை (நிலை) எண்.107 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை நாள் 23.6.2008**

<u>இணைப்பு</u>
<u>2008–09ம் ஆண்டிற்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்</u>

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதி 2008–09ஆம் நிதியாண்டிலிருந்து தொகுதி ஒன்றுக்கு ரூ.1.50 கோடியாக உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி திருத்தி அமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடான ரூ.1.50 கோடியில், அரசால் அறிவிக்கப்பட்ட முன்னுரிமை பணிகளை கட்டாயமாக எடுத்துச் செய்ய ரூ.75.00 இலட்சத்தினை 'வரையறுக்கப்பட்ட நிதியாக' ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதமுள்ள 'வரையறுக்கப்படாத நிதியான' ரூ.75.00 இலட்சத்தில், தடை செய்யப்பட்ட பணிகளின் பட்டியலில் இடம் பெறாத எந்தப் பணிகளையும் தங்கள் விருப்பப்படி சட்டமன்ற உறுப்பினர் தேர்வு செய்யலாம். திருத்திய வழிகாட்டு நெறிமுறைகள் கீழ்க்கண்டுள்ளனவாகும்.

## 2. வரையறுக்கப்பட்ட நிதியான ரூ.75.00 இலட்சத்தில் எடுத்துச் செய்யப்படக்கூடிய பணிகள்:

பெரும்பான்மையான அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், சத்துணவு சமையற் கூடங்கள் குறிப்பாக நகர்ப்புறப் பகுதிகளில் மற்றும் ஓரளவு ஊரகப் பகுதிகளில் பழுதடைந்த கட்டடங்களில் இயங்குவதால் அவைகளுக்கு படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. எனவே, 2008–09ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ரூ.10.00 இலட்சத்தை அங்கன்வாடி கட்டடங்கள், சத்துணவு மையக் கட்டடங்கள், சத்துணவு சமையற் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் எடுத்துச் செய்ய ஒதுக்கீடு செய்ய வேண்டும். இந்த வகையில் இத்தகைய பணிகளுக்காக மாநிலத்தில் மொத்தம் ரூ.23.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வரையறுக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள ரூ.65.00 இலட்சத்தில் சட்டமன்ற உறுப்பினர் அவர்தம் விருப்பத்தின் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பணிகளை மொத்த வரம்பான ரூ. 65.00 இலட்சத்தில் எடுத்துச் செய்யலாம்.

**அ) ஊரகப் பகுதிகளில் –**

1. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
2. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப்பணி மட்டும் மேற்கொள்ளல்).
3. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.
4. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு தங்கும் விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுத்தல்.
5. ஊனமுற்ற நபர்களுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுத்தல்.
6. 2006–07, 2007–08, 2008–09–ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட கிராம ஊராட்சிகளில் எடுத்துக் கொள்ளப்படாத குடியிருப்புகளில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் கூடுதலாக இடுகாடு/ சுடுகாடுகள் அமைத்தல்.
7. இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்ட விதிமுறைகளின் அடிப்படையில் புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை மேம்படுத்துதல்.

**ஆ) நகர்ப்புறப் பகுதிகளில்–**

1. சரளை மற்றும் கப்பிச் சாலைகளை தார் சாலையாக மேம்படுத்துதல்.
2. மிகவும் பழுதடைந்துள்ள தார்சாலைகளைப் புதுப்பித்தல் (தேவையின் அடிப்படையில் தார்சாலையில் உள்ள பள்ளங்களை நிரப்பி தார்சாலைப்பணி மட்டும் மேற்கொள்ளல்).
3. சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல்.

4. அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு கால்நடை மருத்துவ மனைகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுத்தல் மற்றும் அரசு பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப்பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு தங்கும் விடுதிகள் ஆகியவைகளுக்கு கட்டடம் மற்றும் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுத்தல்.

5. ஊனமுற்ற நபர்களுக்காக அரசு நடத்தும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் அரசு அனாதை விடுதிகள் ஆகியவைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்துகொடுத்தல்.

6. சுடுகாடு/இடுகாடுகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

7. தேவையின் அடிப்படையில் மழைநீர் வடிகால் வசதிகளுடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் நடைபாதைகள் அமைத்தல்.

8. புதிய பொது பூங்காக்கள் அமைத்தல்.

9. பொதுக் கழிப்பிடங்கள் கட்டுதல்.

## 3. வரையறுக்கப்படாத நிதியான ரூ.75.00 இலட்சத்தில் எடுத்து செய்யப்படக்கூடிய பணிகள்—

சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட ‘தடை செய்யப்பட்டப் பணிகளைத்’ தவிர பிற எந்தப் பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியின்கீழ் எடுத்துச் செய்யலாம் . அதேபோல் வரையறுக்கப்பட்ட நிதியில் எடுத்துச் செய்யப்படக் கூடிய பணிகளையும் வரையறுக்கப்படாத நிதியில் மேற்கொள்ளலாம்.

## 4. தடைசெய்யப்பட்ட பணிகள்—

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் சிறப்பினமாக எடுத்து செய்ய அனுமதிக்கப்பட்ட பணிகளைத் தவிர கீழ்க்காணும் ‘தடை செய்யப்பட்ட பணிகளை’ எடுத்து செய்ய இயலாது.

1. மத்திய மாநில அரசுத் துறைகள் (பொதுத்துறை நிறுவனங்கள் உட்பட) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள், சங்கங்கள் ஆகியவைகளுக்கான அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வசிப்பிடங்கள் கட்டுதல்.

**விதிவிலக்கு** – அனைத்து அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவைகளுக்கு கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவர் கட்டுதல், பொது விநியோகக் கடைகளுக்குக் கட்டடம் கட்டுதல், நேரடிக் கொள் முதல் நிலையங்கள் மற்றும் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கக் கட்டடங்கள், மொத்த குளிர்பதன மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டுதல்.

2. அனைத்து வகையான பராமரிப்பு, பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு** – கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அரசுத் திட்டங்களின்கீழ் 31.12.1998 வரை கட்டப்பட்ட தொகுப்பு வீடுகளை, ஒரு வீட்டிற்கு ரூ.10000/–க்கு மிகாமல் பழுது நீக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். நகர்ப்புறங்களில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் / தாட்கோ மூலம் 31.12.98 வரை கட்டப்பட்ட வீடுகளை ஒரு வீட்டிற்கு ரூ.10000/–க்கு மிகாமல் சட்டமன்ற உறுப்பினரின் இசைவினைப் பெற்று பழுது நீக்கம் மேற்கொள்ளலாம். இருப்பினும், மேற்படி வீடுகளை பழுது நீக்கம் செய்ய எடுத்துக்கொள்ளும் முன்னர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மற்றும் தாட்கோ நிறுவனத்திடமிருந்து உரிய அனுமதி பெறப்படவேண்டும்.

3. அசையும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் வாங்குதல்.

**விதிவிலக்கு** – அரசுப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், கள்ளர் சீரமைப்புப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், அரசு தங்கும் விடுதிகள், அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு தளவாடச் சாமான்கள் மற்றும் உபகரணங்கள் வாங்குதல்.

4. அரசு உதவி பெறும் பள்ளிகள், சுயநிதிப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு எவ்விதப் பணிகளையும் மேற்கொள்ளுதல்.

**விதிவிலக்கு** – 100 சதவீதம் அரசு நிதி உதவி பெறும் மற்றும் 100 சதவீதம் தமிழ் வழிக் கல்வி பள்ளிகளில் பள்ளி வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளை எடுத்துச் செய்தல். பகுதி சுய நிதி பெறும் மற்றும் பகுதி நிதி உதவிப் பள்ளி அல்லது பகுதி தமிழ்வழிக் கல்வி அல்லது பகுதி ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகள் இத்திட்டத்தில் அரசு நிதி உதவி பெற தகுதியில்லை. நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்றுக்கு இத்திட்டத்தில் அரசு நிதிஉதவி ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ரூ. 15.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். அரசு நிதி உதவி பெறும் தகுதி வாய்ந்த பள்ளி ஒன்று இத்திட்டத்தில் எவ்வளவு நிதி உதவி பெற்றிருப்பினும், அப்பள்ளி இத்திட்டத்தின் கீழ் மூன்றாண்டுகளுக்கு மேலும் உதவி பெற தகுதியில்லை.

மேற்படிப் பணிகளைப் பொருத்தமட்டில், மாவட்ட ஆட்சியர் தனது சொந்த விசாரணையை மேற்கொள்ளுவதோடு, சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் அல்லது மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கீழ்க்காணும் சான்றிதழ்களை பணி மேற்கொள்வதற்கு முன் பெறப்பட வேண்டும்.

1) இந்தப் பள்ளி 100 சதவீதம் தமிழ்வழி பயிற்றுவிக்கும் வகுப்புகள் /பிரிவுகள் கொண்டது.
2) இந்தப் பள்ளி 100 சதவீதம் அரசு உதவி பெறும் பள்ளி ஆகும். அதே நிர்வாகத்தால் ஒரே வளாகத்திலோ அல்லது வெவ்வேறு வளாகங்களிலோ நடத்தப்படும் இந்தப் பள்ளியில் சுய நிதி பிரிவுகள் / வகுப்புகள் இயங்கவில்லை.

5. தனிநபர்/ குடும்பப் பயனுக்காக சொத்துக்களை உருவாக்குதல்.

**விதிவிலக்கு** – கிராம ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் இந்திரா நினைவு குடியிருப்புத்திட்ட வழிமுறைகளின்படி புதிய தொகுப்பு வீடுகள் கட்டுதல் மற்றும் கூரை வீடுகளை மேம்படுத்துதல்.

6. அனைத்து வணிக நிறுவனங்கள் / அலகுகள் குறித்த பணிகள்.

7. மானியம் மற்றும் கடன், மத்திய மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிவாரண நிதிக்கு பங்களித்தல்.

8. நில எடுப்பு அல்லது நில எடுப்பிற்கான ஈட்டுத் தொகை வழங்குதல்.

9. முழுமையாக முடிக்கப்பட்ட பணிகள், பகுதியாக முடிக்கப்பட்ட பணிகள் அல்லது இனங்களுக்கான தொகை மீளச் செலுத்துதல்.

10. அனைத்து வரவினங்கள் மற்றும் தொடர் செலவினங்கள்.

11. மத வழிபாட்டு இடங்களில் பணிகள் மற்றும் மத அமைப்புகள் / குழுக்களுக்கு சொந்தமான நிலங்களில் பணிகள்.

12. குட்டைகள், ஊரணிகள், ஆறுகள், குளங்கள், கால்வாய்கள் மற்றும் வாய்க்கால் போன்றவைகளைத் தூர் வாருதல்.

13. சரளை / கப்பி சாலைகள் (தார்சாலை வரை அமைக்கும் சாலைப்பணிகளை மட்டுமே எடுத்துக்கொள்ளலாம்).

14. உயர் கம்ப மின் விளக்குகள் பொருத்துதல்.

தேவையின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருடன் கலந்தாலோசனை செய்து, மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் தேவையான மாறுதல்களை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை செயலருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

கே. தீனபந்து,
அரசு செயலாளர் (பொ)